வாக்குமூலம்

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், மாதவரம்.

வழக்கு எண். CC 579 /2020

வழக்கு சாட்சி LW4/ PW2

| பெயர் | சிகாமணி | ஜாதி | |
|---|---|---|---|
| கணவர்/தந்தை | முனுசாமி | தொழில் | |
| கிராமம் | மாதவரம் | சமயம் | |
| தாலுக்கா | | வயது | 66 |

தேதி 09.07.2025

எதிரி தரப்பில் சட்டப்பிரிவு 355 bnss கீழ் மனுத்தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டன.

சாட்சி சத்தியபிரமாணம் செய்யப்பட்டார்.

முதல் விசாரணை

நான் மாதவரம் பகுதியில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். இவ்வழக்கு குறித்து எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**அரசு தரப்பு வேண்டுகோளுக்கு இணங்க சாட்சி பிறழ் சாட்சியாக குறுக்கு விசாரணை செய்ய அனுமதிஅளிக்கப்பட்டது.**

கடந்த 25.06.2019 அன்று காலை 8 மணிக்கு நான் புத்துமாரியம்மன் கோவில் உள்ள சூப்பர் மார்க்கெட்டில் காய்கறி வாங்கிவிட்டு திரும்பி வரும் போது அங்கே இரண்டு நபர்கள் அவ்வழியாக வந்த பின்னர் பெயர் கேட்டு தெரிந்த கருணாகரன் என்பவரை மடக்கி மேற்படி இருவரையும் ஒருவர் வைத்திருந்த கத்தியை வாங்கி மிரட்டி அவரிடம் தகாத வார்தைகளால் பேசி அவரிடமிருந்து பணத்தை பறிக்க முற்பட்டபோது கருணாகரன் கத்தியதால் அக்கம்பக்கத்தினர் நெருங்கவே பயந்து பின்னர் குமார் அவர் கைகளை பிடித்துக்கொள் என்றும் யஷ்வந்தும், குமாரும் பணம் கேட்டால் தரமாட்டாயா என மிரட்டி அவரிடமிருந்த ரூ.1500 பணத்தையும், செல்போனையும்

பறித்துக்கொண்டு ஓடினார்கள் என்றும், எனது கடையில் இருந்த கூல்டிரிங்க்ஸ் பாட்டில்களை எடுத்து தாறுமாறாக அடித்து பொதுமக்களையும் கத்தியை காட்டி மிரட்டினார்கள் என்றும், அதில் போக்குவரத்து ஸ்தம்பித்தது என்றும், மேற்படி நபர்கள் தப்பி ஓடிவிட்டார்கள் என்றும், மேற்படி சம்பவத்தை நான் நேரில் பார்த்தேன் என்றும் போலீஸ் விசாரணையில் கூறிவிட்டு தற்போது உண்மையை மறைத்து எதிரிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.